புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2053 ஜூன் 23, 2022 புரட்சி 21 முழக்கம் 23 விலை: ரூ.3.00

# இயக்க வளர்ச்சி – தீவிர கொள்கைப் பரப்பலுக்கான திட்டங்களை விவாதித்தது, கழகத் தலைமைக் குழு



17.6.2022 அன்று திருப்பூரில் கழகப் பொருளாளர் துரைசாமி இல்ல வளாகத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் பகல் 11.30 மணியளவில் தொடங்கியது. 17 உறுப்பினர்களில் தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் உட்பட 14 பேர் பங்கேற்றனர்.

இயக்க செயல்பாடுகள், ‘நமக்கான அடையாளம் திராவிட மாடல்’ என்ற தலைப்பில் நடந்த வீதிக் கூட்டங்கள், மண்டல மாநாடுகள், எதிர்கால செயல் திட்டங்கள் குறித்து உறுப்பினர்கள் பலரும் கருத்துகளைத் தெரிவித்தனர். மாலை 7 மணி வரை கருத்துப் பரிமாற்றங்கள் நடந்தன.

கழகத்தின் தொடக்க நாளான ஆகஸ்டு 12ஆம் தேதி ஆண்டுதோறும் பரப்புரைப் பயண நிறைவு மாநாடாக இதுவரை நடத்தப்பட்டது.

கொரானா காரணமாக கடந்த இரண்டாண்டுகளாக பயணங்கள் நடத்த முடியவில்லை. 2022, ஆகஸ்டு 12 - கழகம் தொடங்கி 10ஆம் ஆண்டு நிறைவு பெறுவதால், 10 ஆண்டு நிறைவு விழாவோடு ‘திராவிட மாடல்’ முழக்கத்தை முன் வைத்து சென்னையில் ஒரு நாள் மாநாடாக நடத்த முடிவு செய்யப்பட்டது.

கழகத் தலைவர் பொதுச் செயலாளர், தமிழக முதல்வரைச் சந்தித்து மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

ஈரோட்டில் கூடிய செயலவையில் (ஏப்.3, 2022) செயலவை உறுப்பினர்களிடமிருந்து ஆண்டு சந்தாவாக ரூ1000/- வசூலிப்பது என முடிவு செய்யப்பட்டது. இது தவிர இயக்கப் பணிக்கு முழு நேரப் பணியாளர்களையும் நியமிக்க முடிவு செய்யப்பட்டது. முழு நேரப் பணியாளர்களுக்கு ஊதியமாக வழங்கும் தொகையைப் பகிர்ந்து கொள்ள பல தோழர்கள் ஆர்வத்துடன் முன் வந்தனர். அதற்கான தொகையையும் அறிவித்தனர்.

ஆண்டு சந்தா, இயக்கத்துக்கான நன்கொடைகளை ஜூலை மாதத்திலிருந்து வசூலிப்பது என முடிவு செய்யப்பட்டது. இந்த வசூல் பொறுப்பை தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் பொறுப்பேற்று செயல்படுவார். இதற்காக தனி வங்கிக் கணக்கு தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு மாணவர் கழக அமைப்புகளை அமைப்பதில் தீவிர கவனம் செலுத்தி, அதற்காக மாணவர்களைக் கொண்ட குழுக்கள் அமைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மாணவர் இளைஞர்களிடையே சமூக நீதி மற்றும் ஜாதி வெறி எதிர்ப்பு பெண்ணுரிமை தொடர்பான பிரச்சினைகளை எளிமையாக விளக்கும். சிறு பிரச்சாரங்களை மிக மிகக் குறைந்த செலவில் (ரூ.5 அல்லது ரூ.10) வெளியிட்டு, மாணவர்களிடையேயும் இளைஞர்கள் இடையேயும் அவற்றைக் கொண்டு போய் விற்பனை செய்யும் இயக்கம் நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மாணவர் கழக அமைப்புகள் திருப்பூர், மேட்டூர், கள்ளக்குறிச்சி, சென்னையில் செயல்படும் நிலையில் முதற்கட்டமாக இவற்றுக்கு மாவட்ட அமைப்பாளர்களை நியமித்து, பிறகு அவர்களைக் கொண்டு தலைமைக் கழக ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்கி, மாணவர் கழகங்களை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது.

சமூக வலைதளங்கள் சக்தி மிக்க ஊடகங்களாக மாறியுள்ள நிலையில் இயக்கத்தில் சமூக ஊடகங்களில் தீவிரமாக இயங்கும் தோழர்களுக்கு பயிற்சி ஒன்று ஏற்பாடு செய்யும் யோசனையை முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் முன் வைத்தார்.

கருத்துகளை பொறுப்புடனும் ஆழமாகவும் சுருக்கமாகவும் பதிவிடுதல் குறித்தும் பொதுச் செயலாளர் குறுஞ்செய்தி, கழகத் தலைவர் யூடியூப் உரைகளை தோழர்கள் தாங்கள் படிப்பதோடு முடித்துக் கொள்ளாமல் மற்றவர்களுககும் ‘ஷேர்’ செய்வது குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

சங்பரிவாரங்கள் பல்வேறு பெயர்களில் உள்ளூர் மட்டத்தில் மதவெறி அமைப்புகளை உருவாக்குவதும் வன்முறை கலவரத்துக்கு பழக்கப்பட்டவர்களை சமூக விரோத செயல்களில் ஈடுபட்டோரை அதில் உறுப்பினராக்கி, உள்ளூர் மட்டத்தில் சிறிய பிரச்சினைகளை ஊதிப் பெரிதாக்கி மதவெறி பரப்பலுக்கான செயல் திட்டமாக மாற்றி வருவதையும் தலைமைக் குழு விவாதித்தது. தமிழ்நாட்டை மதவெறி மண்ணாக்கும் முயற்சிகளை முறியக்கும் பல்வேறு யோசனைகள் விவாதிக்கப்பட்டன.

உள்ளூர் மட்டத்தில் மதவாத எதிர்ப்புக் கொள்கையுள்ள குழுக்கள், இயக்கங்கள், சிந்தனையாளர்கள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் உள்ளூர் மட்டத்திலே திரட்டி ஒருங்கிணைப்பை உருவாக்கவும் அந்த ஒருங்கிணைப்பு ஒரு அமைப்பு வடிவமாக உருவெடுத்து விடாமல் எச்சரிக்கையாக ‘அமைப்பில்லாத ஒன்று கூடல்’ என்ற பண்போடு, அவ்வப்போது சங்கிகளுக்கு எதிர்வினையாற்றும் கருத்துருவாக்கங்களை அறப்போராட்டம், பரப்புரை வழியில் அந்தந்த ஊர்களில் பரப்பி மக்களிடம் நெருக்கமாக்கிக் கொண்டும் - மதவெறி சக்திகளைத் தனிமைப்படுத்தும் திட்டங்களைப் பற்றி விவாதிக்கப்பட்டது.

களப்பணியாளர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றை ஜூலை 23லிருந்து 27 தேதி வரை திருச்சி அல்லது ஏலகிரியில் நடத்துவது என்றும் ஜூலை 22இல் அதே இடத்தில் சமூக வலைதளங்களில் இயங்கும் தோழர்களுக்கு ஒரு நாள் பயிற்சி நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பயிற்சியாளர்களின் பட்டியல் தயாரிப்புப் பணியை பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் மேற்கொள்வார் என முடிவு செய்யப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழகத் தொடக்க விழா மாநாடு 12.8.2012 அன்று ஈரோட்டில் இரண்டு நாள் எழுச்சியுடன் நடைபெற்றது.

அதேபோன்று கழகத்தின் மாநில மாநாட்டை பேரெழுச்சியோடு செயல் திட்டத்தை முன் வைத்து அதே ஈரோட்டில் இரண்டு நாட்களாக இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இடைவேளையில், தலைமைக் குழுவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி 75ஆம் அகவையில் ஜூன் 20இல் அடி எடுத்து வைப்பதைக் கொண்டாடும் மகிழ்வாக ‘கேக்’ வெட்டும் நிகழ்வுக்கு தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

மிகுந்த மகிழ்ச்சி - உற்சாகத்துடன் தோழர்கள் கேக் வெட்டி மகிழ்ந்து விழாவைக் கொண்டாடினர்.

பிரியாணிபாளையம் பிரியாணிக் கடை நிர்வாகியும் கழகத் தோழருமான பாபு அனைவருக்கும் மதிய உணவாக பிரியாணி வழங்கினார். ●

தலையங்கம்

## நாட்டை எரிய வைக்கிறது, ‘அக்னிபாத்’

குலக் கல்வித் திட்டத்தை தன்னிச்சையாகத் திணித்த இராஜ கோபாலாச்சாரி, இராமானுஜர் யாரைக் கேட்டு தனது சித்தாந்தத்தை உருவாக்கினார் என்று திமிரோடு கேட்டதுதான் நினைவுக்கு வருகிறது. மோடியின் அக்னி பாத் என்ற இராணுவத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள் சேர்க்கும் திட்டத்தை இராஜாஜி, ஹிட்லர் பாணியில் கொண்டு வந்தார். இப்போது திரும்பிப் பெற முடியாது என்று திமிரோடு பேசுகிறது, ஒன்றிய ஆட்சி; நாடே பற்றி எரிகிறது.

10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புகளோடு (அதையும் முடிக்காத நிலையில்) கற்றலுக்கு மூடு விழா நடத்தும் வடநாட்டு இளைஞர்கள் பெரும்பாலும் நம்பி இருக்கும் ஒரே வேலை வாய்ப்பு இராணுவத்தில் அடிமட்ட சிப்பாய்கள் அல்லது சேவை செய்யும் பணியாட்கள் வேலை தான். அவர்களின் ஒற்றை வேலை வாய்ப்பையும் குலைக்கும்போது பதற்றமும் எதிர்ப்பும் பற்றிக் கொண்டு விட்டது.

2016-2019 நிலவரப்படி, இராணுவத்தில் சேருவதில் இந்தியா விலேயே முதலிடம் வகிப்பது உ.பி. (18,906 பேர்), தமிழ்நாடு, அந்தமான், புதுச்சேரி மற்றும் நேபாளத்தைச் சேர்த்து 5300 பேர்தான் என்று இந்திய தகவல் பாதுகாப்பு அமைச்சகத்தின் புள்ளி விவரம் கூறுகிறது.

பொதுவாக, இராணுவ சிப்பாய்கள் வேலைக்கு வருவோரில் பெரும் பான்மையினர் ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ பிரிவினர்தான். ‘பிராமணர்கள்’ இப்போது உயர் அதிகாரிகள் பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இந்திய இராணுவ கட்டமைப்பில் இப்போதும் பின்பற்றப்படும் ஒரு நடைமுறை, மாநில வாரியாகவும் ஜாதி வாரியாகவும் இராணுவ அமைப்புகளை உருவாக்குவது ஆகும். 1857இல் சிப்பாய் கலகம் என்ற பெயரில் இந்து - முஸ்லீம் மத உணர்வால் கலகம் வெடித்தபோது வங்காளிகள் ஒரே அணியாக செயல்பட்டதே காரணம் என்ற முடிவுக்கு வந்த பிரிட்டிஷார், இராணுவத்தை ஜாதி - மாநில அடிப்படையில் பிரித்து வைக்கும் நடைமுறைகளைத் தொடங்கி விட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு உச்சநீதி மன்றத்தில் ஒன்றிய ஆட்சி தாக்கல் செய்த மனுவில் இந்திய இராணுவத்தை மாநில - ஜாதி அடிப்படையில் கூறுபோட்டு வைத்திருப்பதே இராணுவத்தின் வெற்றிக்கு அடிப்படை என்று ஒப்புக் கொண்டதோடு, குடியரசுத் தலைவர்கள் பாதுகாப்பு அணியிலும் அந்த முறையையே பின்பற்றுகிறோம் என்று கூறியது.

இப்போது, ‘அக்னி பாத்’ திட்டத்தில் ஒப்பந்தத்துக்கு ஆள் சேர்ப்பதில் இம்முறை கைவிட்டு, ‘அகில இந்திய அடிப்படை’யில் பணியமர்த்தம் நடத்த ஒன்றிய ஆட்சி முடிவு செய்து ஏற்கனவே நிலவும் நடைமுறையை மாற்றியமைக்க முன் வந்திருப்பது பரம இரகசியமாகவே இருக்கிறது. ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (ஜுன் 18, 2022) சுஷந்த் சிங் என்ற ஆய்வாளர் எழுதிய கட்டுரையில் இதை சுட்டிக் காட்டியிருக்கிறார். மாநில ஜாதி அடையாளத்துக்கு அப்பால் மத அடையாளத்துக்குள் இளைஞர்களைக் கொண்டு வந்து, அவர்களுக்கு துப்பாக்கி சுடுதல் உள்ளிட்ட இராணுவப் பயிற்சிகளை அளித்து சிவில் சமூகத்துக்கு அனுப்பி வைப்பதன் நோக்கம், பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுவோரில் 75 சதவீதம் பேரை இராணுவத்துக்குள் அனுமதிக்காமல், அவர்கள் வேறு வேலைகளைத் தேடிச் செல்லும் வாய்ப்புகளையும் பறித்து, வயது வரம்புகளையும் கடக்கச் செய்து, ஆயுதப் பயிற்சிகளோடு களத்தில் இறக்குவது, துப்பாக்கி முனையில் ‘இந்து’ இராஜ்யத்தை ஏற்படுத்து வதற்கான சதியா என்ற அச்சம் எழவே செய்கிறது.

‘இந்துக்களை இராணுவ மயமாக்கு; இராணுவத்தை இந்து மயமாக்கு’ எனும் சவர்க்கார் கோட்பாடு செயல் வடிவம் பெறுகிறதா?

1966இல் இராணுவத்தில் ஆள் சேர்க்க ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒதுக்கப்பட்ட ‘கோட்டா’ முறை, ‘அக்னிபாத்’ திட்டத்தில் கைவிடப் படுவதால் ஒரு குறிப்பிட்ட மாநிலத்தைச் சார்ந்தவர்கள் ஆதிக்கத்துக்கு வழி வகுப்பதோடு கூட்டாட்சி அமைப்பையும் குலைத்து விடுகிறது.

ஆயுதப் பயிற்சியோடு ஊர்களில் வேலை வாய்ப்பின்றி நடமாடும் இளைஞர்கள், சமூக நெருக்கடிகள் உருவாகும்போது தன்னெழுச்சியாக போராடத் தொடங்குகிறார்கள். அப்போது இவர்கள் போராட்டத்தில் ஊடுருவி வன்முறைக் களமாக்கிடும் ஆபத்துகளை நிச்சயம் எதிர்பார்க்க லாம். யுகோஸ்லேவியாவிலிருந்து குவாண்டா வரை இராணுவப் பயிற்சி பெற்ற இளைஞர்களின் பங்களிப்புகளால் தான் மைனாரிட்டி மக்களுக்கான கலவரத் தீ மூண்டெழுந்தது என்பது வரலாறு.

‘ஒரு ரேங்க், ஒரு பென்ஷன்’ என்று மோடி தந்த பொறுப்பற்ற தேர்தல் வாக்குறுதியால், 8 இலட்சம் கோடி ரூபாய் கூடுதலாக இராணுவச் செலவு செய்ய வேண்டியிருந்தது. அத்திட்டத்தை தொடர முடியாத நிலையில் இராணுவத்துக்கு 54 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டு இராணுவத்தை நவீனப்படுத்து வதற்கான செலவுக்கு பணமின்றி மூச்சுத் திணறும் நிலையில் அதை சமாளிக்கவே ‘அக்னி பாதை’ வந்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பண மதிப்பிழப்பு; சிறு தொழில் மீதான வட்டி வீத உயர்வு; ஜி.எஸ்.டி. வரி வசூல் முறை, விவசாய சட்டங்கள்; பிற்படுத்தப்பட்டோருக்கு மருத்துவ உயர் படிப்பில் இடஒதுக்கீடு என்று தான் கொண்டு வந்த திட்டங்களில் தோல்வி, பின்னடைவை சந்தித்த மோடி, இதிலும் தோல்வியையும் சந்திக்கப் போகிறார்!

# ‘இந்து’ சமூகத்தைப் பற்றிக் கவலைப்படாத பா.ஜ.க.வினர், சர்வசக்தி ‘இந்து’ கடவுளுக்காகக் கூப்பாடு போடுவது ஏன்?

இந்த செய்தியை படித்தவுடனேயே நெஞ்சம் பதறிப்போனது. கும்பகோணம் அருகே உள்ள சோழபுரத்தில் இது நடந்திருக்கிறது. அந்த ஊரைச் சேர்ந்த சரண்யா நர்சிங் படித்தவர். சென்னை தனியார் மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் உடன் பணியாற்றுகிற வேறு ஜாதியைச் சேர்ந்த மோகன் என்பவரைக் காதலித்திருக்கிறார். திருமணத்தை சரண்யா சகோதரர் ஏற்றுக் கொள்ளவில்லை. இருவரும், அய்ந்து நாட்களுக்கு முன்புதான் திருமணம் செய்து கொண்டுள்ளார்கள்.

சரண்யாவின் உடன் பிறந்த அண்ணன் இந்த திருமணத்தை ஏற்றுக் கொண்டது போல் நடித்து, தனது வீட்டிற்கு விருந்திற்கு வருமாறு அழைத்திருக்கிறார். அண்ணனுடைய பாசத்திற்கு மயங்கி தங்கையும் வந்திருக்கிறார். விருந்து முடிந்து ஊருக்கு கிளம்பும் போது, வீட்டின் வாசலிலேயே வைத்து தங்கையையும், தங்கையின் கணவர் மோகனையும், திருமணமான அய்ந்தே நாட்களில் வெட்டி சாய்த்திருக்கிறான் உடன் பிறந்த சகோதரன். இரண்டு பேருமே இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். ஆனாலும், இந்து மதத்தின் ‘ஜாதி வெறி’யும் ஆண் ஆதிக்கத் திமிரும் இவர்களின் இரத்தத்தை பலியாக கேட்டிருக்கிறது.

இந்து கடவுளைக் குறை கூறுகிறார்கள்; இந்து கடவுள் புண்படுத்தப்படுகிறது என்று கூச்சல் போடுகிறார்கள். இந்து சமூகத்தை காப்பாற்றுவதற்கு, அந்த இந்து சமூகத்திலே இருக்கிற இரண்டுபேர் வேறு வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ள மறுப்பதை ஏன் எதிர்க்க மறுக்கிறார்கள்? சனாதனம் பேசும் ஆளுநர்கள், சன்னிதானங்கள், அண்ணாமலைகள் இது போன்ற கொலைகளைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட கூறாதது ஏன் ?

உலகத்திலேயே இப்படி மனிதாபிமானமற்ற மதம் ஜாதியை சுமந்து கொண்டிருக்கும் போது, இந்துக் கடவுள்களை புண்படுத்து கிறார்கள், இந்துக் கடவுள்களை அவமதிக்கிறார்கள் என்று கூப்பாடு போடுகிறவர்கள், இந்து சமூகத்தில் பிறந்த மக்களையே மனிதாபிமானம் இல்லாமல் கொலை செய்கிறார்களே, இதைக் கண்டிக்காமல் எங்கே போனார்கள் ?

இந்து மதம் ஏன் விமர்சிக்கப்படுகிறது என்பதற்கான காரணம் இங்கே தான் இருக்கிறது. அது தன்னோடு சுமந்து நிற்கும் ஜாதி. அந்த ஜாதியினால் கட்டவிழ்த்து விடப்படுகிற ஜாதி வெறி, சமூக உறவுகளைக குலைத்து விடுகிற ஜாதி வெறி இவைகளைக் கண்டிக்காமல், இந்து மத பெருமையையும், புனிதத்தையும், சனாதன தர்மத்தையும், சகிப்புத் தன்மையையும் பேசிக் கொண்டிருக்கிறவர்கள் இதற்கு என்ன பதிலை கூறப் போகிறார்கள் ?

## வினா – விடை

- அ.தி.மு.க. பொதுக் குழுவுக்கு போலீஸ் பாதுகாப்பு கேட்டு வழக்கு.
  **– செய்தி**

  அதெல்லாம் கலவரம் செய்கிறவர்களை ஜெயக்குமாரே பாத்துக்குவார்; சட்டையைக் கழற்றி பின்னால் கைகளைக் கட்டி மண்டபத்தை விட்டே வெளியே தளளிடுவாரு.

- சாமி சிலைகளை மியூசியங்களில் வைக்கக் கூடாது.
  **– முன்னாள் அய்.ஜி. மாணிக்கவேல்**

  ‘சாமி’களே வெளிநாட்டு மியூசியங்களுக்கு பயணமாகும்போது, நாம் என்ன சார், செய்ய முடியும்? சொல்லுங்க...

- கிராமங்களில்தான் நமது பண்பாடே உயிருடன் இருக்கிறது.
  **– ஆளுநர் ரவி**

  அதற்கு ஆளுநர் மாளிகையில் நமது அரசியல் பண்பாடு குழி தோண்டி புதைக்கப்படுவதையும் சேர்த்துச் சொல்லுங்க.


- ‘பிராமணர்’களை இழிவுபடுத்துவது தொடர்ந்தால், போராடத் தயங்க மாட்டோம்.
  **– பிராமணர் சங்கத் தலைவர் ஆடிட்டர் கணேசன்**

  ஆமாம்; நீங்கள் தானே போராட வேண்டும். கடவுளா, உங்களுக்காகப் போராடுவார்? அவர் ‘கல்லாக’த்தான் இருப்பார்.

- 4 ஆண்டுகளுக்குப் பின் ‘அக்னி வீரர்கள்’ முடிவெட்டலாம்; வாட்ச்மேன் ஆகலாம். **– ஒன்றிய அமைச்சர் கிஷன்ரெட்டி**

  இதுக்கெல்லாம் கூட இராணுவப் பயிற்சி தேவையா ஜி!

## இயந்திரமுறைத் தொழில் தேவையே !



கார்கள் இருக்க, கட்டை வண்டிகள் இருக்க இயந்திரத்தின் மூலமாய்த்தான் – அதாவது இரயில் மூலம் பிரயாணம் செய்தோம்; மோட்டாரில் பிரயாணம் செய்தோம்; ஆகாயக் கப்பலிலும் பிரயாணம் செய்தோம்; அவைகளையே எல்லா மக்களும் போக வரப் போக்குவரத்துச் சாதனமாக்கவும் ஆசைப்படுகிறோம்; மற்றவர்களும் ஆசைப்படுகிறார்கள்.

ஆகவே, இதை மனிதத் தன்மையுடன் கூடிய குற்றமற்ற இயற்கை உணர்ச்சி என்று தான் சொல்ல வேண்டுமே தவிர, இது எவ்விதக் குற்றமுள்ளதும், அநியாயமானதும் என்று சொல்லி, இதற்காக யாரையும் கண்டிக்கவும் முடியாது. ஜீவ சுபாவமே ஆசையின் உருவமாகும்.

ஆகவே, இயந்திரம் வேண்டாம் என்பது இயற்கையோடும் முற்போக்கோடும் போராடும் ஒரு அறிவீனமான பிற்போக்கான வேலையாகுமே தவிர, மற்றபடி பயனுள்ள வேலையாகாது.

**குடி அரசு – 14.12.1930**

## அன்று குலக் கல்வி; இன்று தேசியக் கல்வி

# குலக் கல்விப் போராட்ட வரலாறு என்ன?

*கோவை காரமடையில் தேசியக் கல்வியையும் குலக் கல்வியையும் ஒப்பிட்டும் குலக் கல்வி எதிர்ப்பு வரலாற்றை விளக்கியும் பொறியாளர் மு. செந்திலதிபன் ஆற்றிய உரை.*

*இராஜகோபாலாச்சாரி – தன்னிச்சையாகக் கொண்டு வந்த குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து தமிழகத்தில் எழுந்த போராட்ட வரலாறு மற்றும் அரசியல் சூழலை விளக்குகிறார்.*

5ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் தொழில் படிப்புக்குச் செல்ல வேண்டுமாம். 10 வயதில் தந்தை தொழிலை தானே கற்றுக் கொள்ள தள்ளப்படுவார்கள். அதற்கு அரசே குழந்தைகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் தொழிற்பயிற்சி அளிக்கப்படும். எப்போது? 10 வயதில் அப்பன் தொழிலை பிள்ளை கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆச்சாரியார் கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தையே புதிய கல்விக் கொள்கையில் நவீனப்படுத்தி புகுத்துகிறார்கள்.

ராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்ற மண் தமிழ் நாடு. தந்தை பெரியார் நடத்திய கிளர்ச்சிக்கான ராஜாஜி ஆட்சிப் பீடத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலையை உருவாக்கியது.

வரலாற்றை நாம் சரியாக உள்வாங்க வேண்டும். அப்போதுதான் நாம் களத்தில் நின்று போராடி வெற்றி காண முடியும்.

ராஜாஜியின் குலக்கல்வித் திட்டம் அடித்து நொறுக்கப்பட்ட வரலாற்றை திரும்பத் திரும்ப நாம் மனக்கண் முன் நிறுத்த வேண்டும்.

1952 ஜூன் 24 ஆம் நாள், சென்னை மாநில முதலமைச்சர் ராஜாஜி, சென்னை திருவான்மியூரில் நடந்த சலவைத் தொழிலாளர் மாநாட்டில் பங்கேற்றார். அதில் பேசும் போது, “அவனவன் சாதி தொழிலை அவனவன் செய்ய வேண்டும். வண்ணார் வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டியது இல்லை. குலத் தொழிலைச் செய்தால் போதும். எல்லோரும் படித்தால் வேலை எங்கிருந்து கிடைக்கும்” என்று கூறினார்.

அப்போதைய கல்வி அமைச்சர் டாக்டர் எம்.வி.கிருஷ்ணாராவ் 20.03.1953 இல் சென்னை சட்டமன்றத்தில், “தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் படிக்கும் கால அளவை நாளொன்றுக்கு மூன்று மணி நேரமாகக் குறைப்பது என்றும், அந்நேரத்தில் குழந்தைகளின் பெற்றோர் செய்யும் தொழில்களைக் கற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்கவும் சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது” என்று கூறினார். இன்னொன்றையும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

“பரம்பரைத் தொழில் செய்யாத குலத்தில் பிறந்த குழந்தைகள் வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் பிறர் செய்யும் தொழில்களைக் கவனிக்கச் செய்து கற்கச் செய்யவும் ஆலோசிக்கப்படுகிறது.

விவசாயத் தொழில்கள், கொட்டகை போடுதல், செங்கல் அறுப்பு வேலைகள், கிணறுகள் வெட்டுதல் போன்ற பல வேலைகளில் பள்ளிச் சிறுவர் சிறுமியரை பழக்கப் படுத்துவது என்பதும் யோசிக்கப்பட்டு வருகிறது.”

**பெரியாரின் போர்முரசு :** விடுதலை ஏட்டில் 31.03.1953 “சிறுவர் கல்வியைப் பாழாக்கும் புதிய திட்டம்! உஷார்” என்று பெரியார் தலையங்கம் தீட்டினார்.

தந்தை பெரியார் எச்சரிக்கை செய்தபடி 1953-54 ஆம் கல்வியாண்டில் புதிய கல்வித் திட்டம் வருகிறது என்று ராஜாஜி அரசு அறிவித்தது.

இதனிடையில் காஞ்சிபுரத்தில் நடந்த சென்னை மாகாண யாதவ மாணவர் மாநாட்டில், ராஜாஜி அமைச்சரவையின் முடிவை ஆதரித்து மத்திய விவசாயத்துறை அமைச்சர்

**மு. செந்திலதிபன்**



**ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்தை காங்கிரசுக்குள் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், செங்கல்வராயன், பத்திரிகையாளர் டி.எஸ். சொக்கலிங்கம் மற்றும் ஜி.டி. நாயுடு, ஜெ.சி. குமரப்பா எதிர்த்தனர். ‘கல்கி’ ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியும் ம.பொ.சி.யும் ஆதரித்தனர்.**

சென்னகவுடா பேசும் போது, “யாதவர் சமூக இளைஞர்கள் நவீன பால்பண்ணை நடத்தி, பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். ராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தை ஆதரிக்கிறேன்” என்று பேசினார்.

பம்பாயிலிருந்து வெளிவந்த ‘பிளிட்ஸ்’ ஏடு, “வருணாசிரம முறைக்கு உயிர் ஊட்டும் குலக்கல்வித் திட்டம்” என்று எழுதியது.

‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஏடு, “துப்புரவு தொழிலாளியின் பிள்ளைகள் ஆசிரியராகவோ, மருத்துவராகவோ வருவதை ஏன் தடுக்க வேண்டும்?” என்று கேள்வி எழுப்பியது.

களத்தில் குதித்து விட்டார் தந்தை பெரியார். திருச்சியில் திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகக் குழுக் கூட்டம் 1953 ஜூன் 3 ஆம் தேதி கூடியது. அதில் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து போராட்டத்தை அறிவிக்க தந்தை பெரியாருக்கு பொறுப்பு அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1953 ஜூலை 11, 12 தேதிகளில் மன்னார்குடியில் தஞ்சை மாவட்ட திராவிடர் கழக மாநாடு தொடங் கியது. அந்த மாநாட்டில் ராஜகோபாலாச்சாரி ஆட்சியின் சூழ்ச்சியை அம்பலப்படுத்திய பெரியார், குலக்கல்வித் திட்டத்திற்கு எதிரானப் போராட்டத்தை அறிவித்தார்.

ஒரே நாள் இடைவெளியில் 1953 ஜூலை 14 ஆம் தேதி சட்டமன்றம் முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வ.வீராசாமி தலைமையில், குலக்கல்வித் திட்டத்தைக் கண்டித்தும், திரும்பப் பெற வலியுறுத்தியும் மறியல் அறப் போராட்டம் நடைபெறும்.

ஜூலை 20 ஆம் தேதி கிராமங்களில் பள்ளிகள் முன்பு மறியல் நடக்கும் என்று தந்தை பெரியார் பிரகடனம் செய்தார்கள்.

சென்னை சட்டமன்றம் முன்பு நடக்க இருந்த மறியலுக்கு ராஜாஜி அரசு 144 தடை உத்தரவு போட்டது. கோட்டை முன்பாக மலபார் போலீஸ் ஆயிரக்கணக்கில் குவிக்கப் பட்டது. ஆனால் அதற்கெல்லாம் பயந்து ஒடுகின்ற படையா? கருஞ்சட்டைப் படை?

திட்டமிட்டவாறு ஜூலை 14 ஆம் தேதி மூன்று மூன்று பேராக மறியல் அணி கோட்டை நோக்கி புறப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் வ.வீராசாமி தலைமையில் முதல் அணி புறப்பட்டது. அண்ணா சாலையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு விட்டனர். அடுத்தடுத்து திருவாரூர் தங்கராசு, எம்.கே.டி. சுப்பிரமணியம், டி.எம்.சண்முகம், த.லோகநாதன் மனோரஞ்சிதம், லட்சுமிபாய் ஆகியோர் தலைமையில் மறியல் செய்ய அணிகள் சென்று கொண்டே இருந்தனர்.

சட்டமன்றத்திற்கு முன்பாக சென்ற இவர்களில் 80 தோழர்கள் கைது செய்யப் பட்டனர்.

**அண்ணாவின் மும்முனைப் போராட்டம்:** மேலும் மேலும் மக்கள் கூட்டம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை நோக்கி ஆயிரக் கணக்கில் திரண்டு வந்தவுடன், மலபார் போலீஸ் தடியடி நடத்தத் தொடங்கியது. குண்டாந்தடி தாக்குதலை தாங்கிக் கொண்டு, மண்டை உடைந்து ரத்தம் வழிந்தோடிய நிலையிலும் ராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராக முழக்கமிட்டவாறு தொண்டர்கள் முன்னேறிச் சென்றனர்.

ராஜாஜி அரசின் அடக்குமுறையைக் கண்டித் தும், குலக்கல்வியை எதிர்த்துப் போராடியவர்கள் மீது காவல்துறை நடத்திய தாக்குதலைக் கண்டித்தும் சட்டமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, உழைப்பாளர் கட்சி, ஐக்கிய முன்னணி உள்ளிட்ட கட்சிகள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தன. ஆனால் அதற்கு அவைத் தலைவர் மறுத்துவிட்டார். அந்த கட்சிகளைச் சேர்ந்த 80 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இந்தச் சூழலில் பேரறிஞர் அண்ணா அவர்கள் திமுக சார்பில் மும்முனைப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். 1959 ஜூலை 14 ஆம் தேதி குலக்கல்வியை எதிர்த்து, ராஜாஜி வீட்டின் முன்பு மறியல். ஜூலை 15ஆம் தேதி தமிழர்களை ‘நான்சென்ஸ்’ என்று விமர்சனம் செய்த பிரதமர் நேருவைக் கண்டித்து ரயில் மறியல். மேலும் அதே நாளில் திருச்சி மாவட்டத்தில் டால்மியாபுரம் ஊர் பெயரானது கல்லக்குடி என மாற்றம் செய்யக் கோரியும் மும்முனைப் போராட்டம் அறிவிப்பு, தமிழ்நாடு எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னையில் பேரறிஞர் அண்ணா, ஈ.வெ.கி.சம்பத், நாவலர், என்.வி.நடராசன், கே.ஏ.மதியழகன் ஆகியோர் கட்சி அலுவலகத்தில் கைது செய்யப்பட்டனர். இதுகுறித்து செய்தி வெளியிட்ட ஏடுகள் திமுகவின் ஐம்பெரும் தலைவர்கள் கைது என்று செய்தி போட்டன. அதிலிருந்துதான் திமுகவின் ஐம்பெரும் தலைவர்கள் என்று இவர்கள் கழகத் தோழர்களால் அழைக்கப்பட்டனர் என்பது கூடுதல் செய்தி ஆகும்.

ராஜாஜி வீட்டின் முன்பு மறியல் செய்த திமுக அணி சத்தியவாணிமுத்து அம்மையார் தலைமையில் சென்றபோது, 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதே நாளில் தூத்துக்குடியில் ரயில் மறியல் செய்த திமுக தொண்டர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, 4 பேர் உயிரைப் பறித்தது ராஜாஜி சர்க்கார். 50 பேர் படுகாயம் அடைந்தனர்.

டால்மியாபுரம் பெயரை கல்லக்குடி என்று மாற்றக் கோரி கல்லக்குடியில் ரயில் மறியல் போராட்டம் நடத்திய கலைஞர் கைது செய்யப் பட்டார். அந்தப் போராட்டக் களத்தில் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியானார்கள்.

தந்தை பெரியார் பிரகடனம் செய்தவாறு 20.7.1953 அன்று பள்ளிகள் முன்பு, குலக்கல்வியை எதிர்த்து ஆயிரக்கணக்கான ஊர்களில் நடந்த மறியல் போராட்டம் பெரு வெற்றி பெற்றது. பெரியாரின் போராட்டம் மக்கள் போராட்டமாக வெடித்தது.

நாடெங்கும் ராஜாஜிக்கு எதிர்ப்புக் கிளம்பியது. காங்கிரஸ் கட்சிக்குள்ளும் இது எதிரொலித்தது. சென்னை மாநில முன்னாள் முதல்வர் ஓ.பி.இராம சாமி ரெட்டியார், சென்னை மேயர் செங்கல்வராயன், பத்திரிகையாளர் டி.எஸ்.சொக்கலிங்கம் போன்ற காங்கிரஸ் தலைவர்களும் ராஜாஜியின் குலக் கல்வியை திரும்பப் பெற வலியுறுத்தினார்கள்.

காந்திய அறிஞர் ஜே.சி.குமரப்பா, விஞ்ஞானி ஜி.டி.நாயுடு, டாக்டர் லட்சுமண சாமி முதலியார் போன்றோரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆனால் கல்கி கிருஷ்ணமூர்த்தி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்றவர்கள் ராஜாஜி அரசுக்கு ஆதரவாகப் பேசினார்கள்.

கட்டுரையாளர் :
ம.தி.மு.க. அரசியல் ஆய்வு மய்யச் செயலாளர்
நன்றி: ‘சங்கொலி’

(அடுத்த இதழில் முடியும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கொளத்தூர் மணி 75ஆவது பிறந்த நாள் குடும்ப விழாவாக நடந்தது

# கிராமப் பிரச்சாரங்கள், கழகத் தோழர் சந்திப்புக் கூட்டங்களை அதிகரிக்க கழகத் தலைவர் வேண்டுகோள்





சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் மற்றும் குடும்ப விருந்து நிகழ்ச்சி மேட்டூர் தூய மரியன்னை சமுதாயக் கூடத்தில் கொளத்தூர் மணி தலைமையில் தொடங்கியது.

கலந்துரையாடல் கூட்டத்தில் சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக நகர, கிளைக் கழக, ஒன்றியப் பொறுப்பாளர்களும் தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பொறுப்பாளர்களும், தோழர்களும் கழகத் தலைவருக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களையும், இயக்க வளர்ச்சி குறித்து தங்களது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

கலந்துரையாடல் கூட்ட இடைவேளையில் கழகத் தலைவருக்கு 75ஆவது பிறந்த நாள் விழா கேக் வெட்டப்பட்டு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அதன் பின்பு தலைவருக்கு சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக ரூ.75,000/- வழங்கப்பட்டது. பிறகு குடும்ப விருந்து நிகழ்வு மதியம் 2.00 மணிக்கு நடைபெற்றது. சேலம் மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்ட 250க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது.

உணவு இடைவேளை முடிந்து மீண்டும் கலந்துரையாடல் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. தோழர்களும், பொறுப்பாளர்களும் தங்களது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.குறிப்பாக ஏற்காடு தோழர் பெருமாள் சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக புதிய பரப்புரை வாகனம் வாங்குவதைப் பற்றியும் அதன் உள் கட்டமைப்பு வசதிகள் எப்படி இருக்கும் என்பதைப் பற்றியும் படங் களுடன் கழகத் தலைவர், பொறுப்பாளர்கள், தோழர்களுக்கு விளக்கினார்.

அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, திருப்பூரில் நடைபெற்ற தலைமைக் குழு எடுத்த தீர்மானங்களைப் பற்றி தோழர்களுக்கு விளக்கினார். அதனைத் தொடர்ந்து மாநிலப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் இயக்க செயல்பாடுகள் குறித்தும், வேலைத் திட்டங்கள் குறித்தும் தங்களது கருத்துகளைப் பதிவு செய்தனர்.

நிறைவாக கழகத் தலைவர் நிறைவுரை நிகழ்த்தினார். குறிப்பாக இயக்க நிகழ்ச்சிகள் கிராமப் பிரச்சாரங்களாக இருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மாதமும் கழகத் தோழர்களின் சந்திப்பு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், குறிப்பாக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டுமென்றும், இளைஞர் களுக்கு இட ஒதுக்கீட்டைப் பற்றியும், ஆரிய சூழ்ச்சிகளைப் பற்றியும் விளக்கிட வேண்டுமென்றும் எடுத்துக் கூறினார்.

பின்பு மேட்டூர் நகரம், குமரன் நகர் கிளைக் கழகம், மாணவரணி, இளைஞரணி அமைப்பாளர்களின் பொறுப்புகளுக்கு புதிய பொறுப்பாளர்களை அறிவித்தார்.

மாவட்ட மாணவரணி பொறுப்பாளர்கள்: அகிலன், மகிழன், இனியன்

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள்: சுசீந்திரன், திவாகர்

மேட்டூர் நகரப் பொறுப்பாளர்கள்: நகரத் தலைவர் - செ. மார்ட்டின், நகர செயலாளர் - சு.குமரப்பா

குமரன் நகர் கிளைக் கழகம் : தலைவர் - தேவராசு, செயலாளர் - அ.சீனிவாசன்

நிறைவாக நகரச் செயலாளர் சு.குமரப்பா நன்றியுரையுடன் நிகழ்ச்சி மாலை 5.30 மணிக்கு நிறைவடைந்தது.

## திருப்பூரில் ‘பிரியாணிபாளையம்’ உணவகம் திறப்பு




திருப்பூரில் பிரியாணிபாளையம் ரெஸ்ட்டாரெண்ட் அண்ட் கேட்டரிங் திறப்பு விழா பல்லடம் ரோடு, ஹோட்டல் டி.ஆர்.ஜி. பில்டிங்கில் 17.06.2022 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் உணவகத்தை திறந்து வைத்தார். உணவகத்தின் முதல் விற்பனையைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி துவங்கி வைத்தார்.

முதல் விற்பனையை திருப்பூர் மாநகர மேயர் தினேஷ் குமார் பெற்றுக் கொண்டார். அடுத்து திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கிட்ஸ் கிளப்குரூப் ஆஃப் ஸ்கூல்ஸ் சேர்மன் மோகன் கார்த்திக், கழகப் பொருளாளர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பிரபாகரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, திருப்பூர் மாவட்ட திவிக தலைவர் முகில் ராசு, TEKPA தலைவர் ஸ்ரீகாந்த் மற்றும் செயலவை உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

### நன்கொடை

மேட்டூர் புதுச்சாம் பள்ளி கழகத் தோழர் செந்தில் குமார், கழகத் தலைவரை சந்தித்து கழக வளர்ச்சி நிதிக்காக ரூ.2500/- வழங்கினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.250
தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th June 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN